International Tamil Center

# பன்னாட்டுத் தமிழ் நடுவம்

## இரண்டாவது தமிழ் மாநாட்டு மலர் 2008



# தமிழ்க் காப்புத் தலைவர் பேராசிரியர் சி. இலக்குவனார்

திரு. இலக்குவனார் திருவள்ளுவர்

உலகிலேயே மொழிக்கெனத் தன் வாழ்வை ஒப்படைத்துப் போராட்டக் களங்களில் முன் நின்று போராளியாய் வாழ்ந்தவர் பேராசிரியர் சி. இலக்குவனார்.

"பேராசிரியர் சி. இலக்குவனார் செய்த தமிழ்ப்பணி, தனியொருவர் செய்திட முடியாத செயற்கரிய பெரும்பணி. எழுச்சியும் உணர்ச்சியும் மிக்க பேராசிரியராய்த், துறைத்தலைவராய்க், கல்லூரி முதல்வராய், நூலாசிரியராய், இதழாசிரியராய், இலக்கண இலக்கிய ஆய்வாளராய், மொழி பெயர்ப்பாளராய், மேடைப் பேச்சாளராய், சிறந்த கவிஞராய், மொழிப் போர்த் தளபதியாய் விளங்கியவர் இலக்குவனார். இவரால் தமிழுணர்வூட்டப் பெற்று இவரிடம் பயின்றவர்கள், அமைச்சர்களாய், கட்சித் தலைவர்களாய், இவரைப் போன்றே மொழி ஆற்றல் பலவுடையராய்ச் சிறப்புற்றிருக்கிறார்கள் என அறிய முடிகிறது. இவர் தமிழுக்கென வாழ்ந்தவர். தனக்கென வாழ்ந்திலர். தம்மை நினைந்து தமிழை மறவாது தமிழை நினைந்து தம்மை மறந்தவர்" என்றார் தமிழறிஞர் ஒருவர்.

தமிழ்க்காப்புத் தலைவர் பேராசிரியர் சி. இலக்குவனார், புலவர் படிப்பு மாணாக்கராய் இருந்த பொழுதே தன் வாழ்நாளைத் தமிழ்க்காப்பிற்கான போருக்காக ஒப்படைத்து விட்டார். "புலவர் படிப்பு, தமிழகத்தின் உரிமைக்கும் தமிழ்மொழியின் உயர்விற்கும் உழைப்பதே எனது உறுகடனாகும் என்று உறுதி கொள்ளச் செய்தது; தமிழ்ப் போரே எனது வாழ்க்கைப் போர் என்ற குறிக்கோளை வாழ்வின் உயிராக ஏற்றுக் கொண்டேன்" என, "என் வாழ்க்கைப் போர்" என்னும் தன் வரலாற்று நூலில் அவர் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து முனைவர் கா. மாரிமுத்து,"தமிழ் வளர்ச்சியில் டாக்டர் சி.இலக்குவனாரின் பங்களிப்பு" என்னும் தன் ஆய்வேட்டில், "இளைஞர்கள் கல்வி கற்பது பொருள் ஈட்டவும் வளமாக வாழ்வதுமே குறிக்கோள் என எண்ணுகின்ற காலத்து, இலக்குவனார் இளமையில் மொழியை உயிராக மதிப்பதாகக் குறிப்பிட்டிருப்பது அவருடைய ஆழ்ந்த மொழிப்பற்றைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது" எனச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

உயர்பதவிகள் மூலம் வசதியான வாழ்க்கை வாழ்ந்திருக்க வேண்டிய பேராசிரியர் சி.இலக்குவனார், பணி நீக்கங்களும் சிறைவாசமும் பிற துயரங்களும் அடைந்ததற்குக் காரணம் அவரது தமிழ்நலக்காப்புப் போராட்டங்களே! "கல்வி மொழியாகவும் கடவுள் வழிபாட்டு மொழியாகவும் அரசாள் மொழியாகவும் அறிவியல் மொழியாகவும் தமிழ் ஆகும் நாளே தமிழும் தமிழரும் உயர்வு பெறும் நாள்" என்னும் நிலைப்பாட்டை அறிவித்து அதை நாம் அடைவதற்காகவே அவர் ஒல்லும் வகையெல்லாம் பரப்புரைகளில் ஈடுபட்டார். இதன் மூலம் அறிவியல் உலகைத் தமிழ் ஆள வேண்டும் என்று அன்றைக்கே குரல் கொடுத்தவராய்த் திகழ்கிறார் பேராசிரியர் சி. இலக்குவனார்.

"உயர் கலைகளுக்கெல்லாம் பிறப்பிடமாகக் கிரேக்க நாட்டையே கூறுவர். ஆனால் தொல்காப்பியத்தை ஆராய்ந்து கற்போர் அவ்வாறு கூறார். பல உயர்கலைகளுக்குப் பிறப்பிடம் தமிழகமே என்று தலைநிமிர்ந்து சாற்றுவர். ஆகவே, தொல்காப்பியர் வழிநின்று எழுத்தும் சொல்லும் பொருளும்(இலக்கியமும்) ஆராய்ந்து தமிழகத்தில் ஏற்றம் காண்போம்" என வழிகாட்டிய பேராசிரியர், தொல்காப்பிய இடைச்செருகல்களின் மூலமும் வேறுவகையிலும் தொல்காப்பியத்தை ஆரியத் தழுவலாகவும் வழி நூலாகவும் காட்டுவோருக்கு எதிராகப் பலவகைகளிலும் ஆய்வு நெறி அடிப்படையில் தன் கருத்துகளை எடுத்துரைத்துத் தொல்காப்பியச்

சிறப்பைப் புலப்படுத்தியுள்ளார். தொல்காப்பியம் மரபியல் குறித்துத் தெளிவாக விளக்கிச் சாதீயம் புகாத பழந்தமிழ்ச் சிறப்பை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

"மக்களினங்களில் தமிழினம் தொன்மையான நாகரிகத்தையும் பண்பாட்டையும் கொண்டிருத்தலால் எல்லா இனங்களுக்கும் முன்பே தன்மொழிக்கு இலக்கணம் வகுத்துக் கொண்டது. இதனாலேயே தமிழே உலக முதன்மொழி என்றும் உலக மொழிகளின் தாய் என்றும் அறுதியிட்டுக் கூற இயலும்." எனத் தன் "தொல்காப்பிய ஆராய்ச்சி" நூலில் எழுதி (பக்.37)-இதழ்களிலும், கட்டுரைகளிலும் எழுதி - மாணாக்கர்களிடம் மட்டு மல்லாமல் பொதுமக் களிடையேயும் தமிழின் தொன்மையையும் முதன்மையையும் உணரச் செய்தார்.

திருவையாற்றில் அரசர் கல்லூரியில் புலவர் மாணாக்கராய் இருந்த பொழுதே தன் முதல்வர், பேராசிரியர் எசு.எசு. சுப்பிரமணிய(சாத்திரியார்) தொல்காப்பியத்தை ஆரியத் தழுவலாகக் காட்ட முயன்றபொழுதெல்லாம் கனன்று எதிர்த்த இவருடைய எதிர்ப்பு, வெற்று ஆரவாரக் கூச்சலன்று. ஆங்கில மொழியியல் நூல்களையும் தொல்காப்பியத்தையும் சமசுகிருத இலக்கண நூல்களையும் தானே படித்துணர்ந்து உண்மைகளை வெளிக் கொணரும் ஆய்வுக் கணைகளாகும். எனவே, பிற மாணாக்கர் களாலும் ஆசிரியர்களாலும் மட்டுமன்றி, முதல்வரையே தன் கருத்தைப் பல முறை மாற்றிக் கொள்ளச் செய்தது. அது மட்டுமன்று; தொல்காப்பியம் மிகுதியும் அறியப்படாத அக்காலத்தில் தொல்காப்பிய ஆய்வுரைகளை இதழ்களிலும் வெளியிட்டார். எனவே, பேராசிரியரின் தமிழ்க் காப்புப் பணி படித்த பொழுதே தொடங்கிய சிறப்பு மிக்கது.

தமிழ்க்காப்புத் தலைவர் பேராசிரியர் சி.இலக்குவனார் படித்த பொழுதும் பணிகளில் இருந்த பொழுதும் பணியின்றி இடர்ப்பட்ட பொழுதும் தமிழ்நெறிகளைப் பரப்புவதையும் பேணுவதையும் கடமையாகக் கொண்டு தமிழ்க்காப்புப் பணிகளைச் செய்தார்.

பிறமொழிக் கலப்பற்ற தமிழுக்காகப் பரப்புரை மேற்கொண்ட பேராசிரியர் சி.இலக்குவனார், துக்ளக் என்னும் இதழில், 'எப்' என்னும் ஆங்கில எழுத்தைப் பயன்படுத்தியதற்குக் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த தன் விளைவாக அவ்விதழ் அப்போக்கை நிறுத்திக் கொண்டது.

உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு என வாழவும் அறம் காக்கவும் அல்லவை கடியவும் உண்மையைக் கொணரவும் போராட்ட உணர்வு கொள்ளவும் முன்னெடுத்துக் காட்டாகத் திகழ்ந்த பேராசிரியர் சி.இலக்குவனார், தன் குறிக்கோள் குறித்துப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

"செந்தமிழ் மொழி எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெறவும் திருக்குறள் நெறியில் மக்கள் எல்லோரும் செம்மையுடன் வாழவும் உழைப்பதே என் குறிக்கோளாகும்."

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" எனும் கொள்கை அடிப்படையில் உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் நீங்கிய மக்களினத்தை உருவாக்கவும் மொழிவழி மாநிலங்கள் முழுத்தன்னாட்சி பெற்று முழு உரிமையுடன் சாதி மத வருக்க வேறுபாடு அற்ற மக்களாட்சிச் சமநிலைக் குடியரசுகளாய் இணைந்து வாழும் வன்மைமிக்க பாரதக் கூட்டரசை உருவாக்கவும் அந்தந்த மாநிலங்களில் அந்தந்த மொழிகட்கே முதன்மை என்ற அடிப்படையில் மொழிகளின் சமஉரிமையை நிலைநாட்டவும் தமிழ்நாட்டில் தமிழுக்கே முதன்மை, தமிழில்தான் எல்லாம் என்ற நிலையை விரைவில் உண்டாக்கவும் தமிழர் பங்கு பெற உரிமையுள்ள இடங்களில் எல்லாம் தமிழும் இடம் பெறவும் காலத்துக்கேற்ப மரபு கெடாது தமிழை எல்லா வகையாலும் வளப்படுத்தவும் ஒல்லும் வகையால் அயராது உழைப்பதே இனி எனது வாழ்நாட் பணியாகும்."

"இந்தியாவில் தமிழும் தமிழரும் கெடுகின்றனர் என்றால் தமிழர் அனைவரும் எதிர்த்தால்தானே முடியும். தமிழ்,தமிழ்ப் புலவர்கட்கு மட்டுமா சொந்தம்? அல்லவே. ஆதலின் எல்லாத் தமிழர்களும் ஒன்று கூடிக்

கட்டாய இந்தியை அகற்றும் திட்டம் இடுதல் வேண்டும். திராவிடக் கழகத்தார்கள் தமிழ்ப் புலவர்கட்கு மட்டும் தமிழை உரிமையாக்காது அனைவர்க்கும் உரிமை யாக்கி இந்தி மொழிக் கிளர்ச்சியைத் தொடங்கு வார்களாக" (இந்தி வந்து விட்டது (இலக்கியம்-1948))

***"குலமும் ஒன்றே குடியும் ஒன்றே***
***எல்லா மக்களும் இந் நாட் டரசரே***
***சமத்துவம் போக்கும் சாதியும் மதமும்***
***வேண்டா நமக்கு''***
***(முரசொலி-சிறப்பிதழ் 1969)***

"தமிழ் எமது உயிர். தமிழின் உயர்வே தமிழ்நாட்டின் உயர்வு. தமிழ் நாட்டில் தமிழுக்குத்தான் முதன்மை உண்டு. தமிழ்நாடு ஏனைய நாடுகள் போல் உரிமையாட்சி பெற்றுத் தமிழர்களால் ஆளப்பட வேண்டும்... ..யாம் ஒரு புலவர்; எழுத்தாளர். ஆகவே யாம் யாவர்க்கும் பொதுவான நிலையில் உள்ளோம். கட்சி காரணமாக விருப்போ வெறுப்போ கொள்ள வேண்டிய நிலையில் இல்லோம். ஆனால் தமிழ்ப் பகைவர் எமது பகைவராவர்; தமிழ் நண்பர் எமது நண்பராவர்." (கரும வீரர் காமராசர் பக்கம் 4)

***"தமிழ்மொழி வளரவும் தண்டமிழ்நாடு***
***உரிமை பெற்று உலகோர் மதிக்கவும்***
***அரசியல் பொருளியல் அறிவியல் கலையியல்***
***எவரும் போற்ற இனிய நடையில்***
***தமிழில் மலரத் தண்டமிழ் இலக்கியம்***
***வார இதழ் ஊரார் புகழ வெளியிடல்''***

(பேராசிரியர் சி.இலக்குவனாரின் 'துரத்தப் பட்டேன்' அடிகள் 566 -572)

"மொழியின் உடல் போன்றது எழுத்து. எழுத்தாம் உடல் அழிந்த பின்னர், மொழியாம் உயிர் வாழ்வது எங்ஙனம்? ஆகவே, எல்லா மொழிகளுக்கும் ஒரே எழுத்து என்னும் கொள்கையை இன்றே இன்னே தடுத்தல் வேண்டும். ஒரு மொழியை அழித்து அதன் மக்களைப் பிற மொழியாளருக்கு அடிமையாக்கு வதற்கு இதனினும் கொடிய திட்டம் கிடையாது. ஆகவே,'ஒரே எழுத்து' என்ற கொள்கையை உடனே மடியச் செய்ய வேண்டும்."

"வெளிநாடுகளில், உள்நாட்டவர் உயர்ந்தவர்; வெளிநாட்டவர் தாழ்ந்தவர். ஆனால், தமிழ்நாட்டிலோ தமிழ்நாட்டுக்குரியவர்-தொன்று தொட்டு இங்கே வாழ்ந்து வருபவர்-தாழ்ந்தவர். எங்கிருந்தோ வந்து குடியேறியவர் உயர்ந்தவர். இந்நிலையை மாற்ற வேண்டும்" என்று அவர் கூறினார்.

அவர் விருதுநகர் செந்திற்குமார நாடார் கல்லூரியில் பணியாற்றியபோது அவர்மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பல. அவற்றுள் ஒன்று அவர் தொல்காப்பியர், இளங்கோவடிகள், ஔவையார் ஆகியோருக்கு விழா நடத்தினார் என்பது. திருநெல்வேலியில் 'வட்டத் தொட்டிக்குழு' என்னும் அமைப்பினர், கம்பர் விழா நடத்தியபோது திரிமூர்த்தி என்பார், "சங்க இலக்கியங்களை வங்காளக் கடலில் போடவேண்டும்" என்று குறிப்பிட்டுக் கூடியிருந் தோரிடையே வரவேற்பும் பெற்றார்.(1945) ஆனால் பேராசிரியர் சி. இலக்குவனார், அதே இடத்தில் கூட்டம் நடத்தி, "சங்கத்தமிழ் பாடித் தமிழர் புகழ் வளர்ப்போம்" என்று முழங்கினார். 'சங்க இலக்கியம்' என்னும் வாரஏடும் தொடங்கிச் சங்க இலக்கியச் சிறப்பை மீட்டெடுத்தார்.

ஊர்தோறும் சங்க இலக்கியச் சிறப்புகளைப் பரப்பியும் சங்க இலக்கிய வகுப்புகள் நடத்தியும், தான் பரப்பி வந்தது போல், பிறரிடம் சங்க இலக்கியச் சிறப்புகளை மக்களிடையே கொண்டு செல்லவும் அறிவுறுத்தினார். இப்பாதையில் ஈடுபடச் செய்தார்.

பணியாற்றிய எல்லா ஊர்களிலும் இலக்கிய இலக்கண வகுப்புகளையும் தமிழ் முழக்கப் பணிகளையும் மேற்கொண்டிருந்தார். மதுரை மாநகரில் 'தமிழ்க்காப்புக் கழகம்' நிறுவினார். ஊர்வலங்கள் நடத்தினார். பரப்புரை மேற்கொண்டார். விளம்பரப் பலகைகளில் தமிழ் அமையப் போராடினார். இதனால் தமிழ் உணர்வு மக்களிடையே பரவியது, அப்போதைய அரசிற்கு அச்சத்தை அளித்தது. மக்களிடையே தமிழ் உணர்வு பரவப் பரவ, ஆட்சியில் இருந்து அகலும் நாள் குறைவதை அரசு உணர்ந்தது.

எனவே, இந்திய எதிர்ப்புப் போரைத் தலைமை தாங்கி நடத்தியமைக்காக 1965 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் அவர் சிறை செய்யப்பட்டார்.

இதே போல், "கல்வித் துறையிலும் ஆட்சி, நீதி, கலை ஆகிய துறைகளிலும் தமிழ்உரிமையை நிலை நாட்டும் நல்ல நோக்கத்துடன், தலைநகரை நோக்கியத் தமிழ் உரிமைப் பெருநடைச் செலவு" மேற்கொண்ட திட்டத்திற்காக அதே ஆண்டு, மேத் திங்கள் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் அவரைச் சிறையிலிட்டது.

இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மொழிப்போருக்காகச் சிறை செய்யப்பட்ட ஒரே பேராசிரியர் சி.இலக்குவனார்தான். இவ்வாறு பேராசிரியர் சிறை செய்யப்பட்டபொழுது முத்தமிழறிஞர் கலைஞர், தமிழ்த்தாய் சிறையில் இருப்பதாகவே ஊர்கள் தோறும் முழங்கினார்; முரசொலி, முத்தாரம் முதலிய இதழ்களிலும் எழுதினார். "தமிழ்ச்சிங்கம் பேராசிரியர் இலக்குவனாரைக் கைது செய்து காவலிலே வைத்தது தமிழ்த்தாயைச் சிறைப் பிடித்ததற்கு ஈடில்லையா? அவர் செய்த குற்றமென்ன? வேண்டாத வெளிநாட்டுக் காரனோடு தொடர்பு கொண்டாரா, வேவுகாரர்களுக்கு உளவு சொன்னாரா? பாதுகாப்புச் சட்டம் குறள்நெறிக் காவலரையும் கழகக் கண்மணிகளையும் துரத்திப் பிடிக்கக் காரணமென்ன? கல்லூரிகளில் தமிழ், பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற அரசினரின் கொள்கைக்கு ஆதரவு திரட்ட, பேராசிரியர் இலக்குவனார் பெருநடைப் பயணம் புறப்பட இருந்தாரே அது குற்றமா? மலைபோல-பாறாங்கல் போல-நின்று நிலைமைகளைச் சமாளித்தார் என்ற பட்டங்களைப் போன்று, இன்னும் எந்தப் பட்டங்களுக்காகப் புலமையைச் சிறைப் பிடித்திருக்கிறீர்கள்? குறளின் நெறியைக் கொட்டடியில் பூட்டியிருக்கிறீர்கள்? தமிழின் காவலரைக் காவலிலே வைத்துள்ளீர்கள்?" என்று எழுதினார்.

(முத்தாரம்-தலையங்கம்,மே 15,1965)

ஆய்வுரைப் போர்வையில் தமிழுக்கு எதிராகப் பரப்பும் கருத்துகளுக்கு எதிராகப் போர்! கால ஆராய்ச்சி என்ற பெயரில் முந்தைத் தமிழின் காலத்தைப் பின்னுக்குத் தள்ளுவோருக்கு எதிரான போர்! தாய்மொழித் தமிழைப் படிப்பிப்பதால் தமிழாசிரியர்களுக்கு மறுக்கப்படும் உரிமைகளை மீட்பதற்கான போர்! "எங்கும் தமிழ் என்றும் தமிழ்" துலங்க வேண்டும் என்பதற்கான போர்! அயல் மொழிகளில் மறைக்கப்படும் உயர்தனிச் செந்தமிழ்ச் சிறப்புகளை வெளிக்கொணருவதற்கான போர்! தமிழால் வாழ்ந்து தமிழையே தாழ்த்துவோருக்கு எதிரான போர்! சங்கத் தமிழின் மங்காச் சிறப்பை மறைப்போருக்கு எதிரான போர்! இதழ்களில் தமிழ் இலங்க வேண்டும் எனபதற்கான போர்! கலப்பு நடையைக் கலங்க வைப்பதற்கான போர்! தமிழ்ப் பயிற்றுமொழிச் செயலாக்கத்திற்கான போர்! ஒல்காப் புகழ்த் தொல்காப்பிய இடைச்செருகல்களுக்கு எதிரான போர்! குறள்நெறிக் காப்பிற்கான போர்! தமிழர் இனநலங் காக்கப் போர்! தேமதுரத் தமிழோசையை உலகெலாம் பரவச் செய்வதற்கான தடைகளை எதிர்த்துப் போர்! தமிழ்நாட்டின் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை என்று நிலைமாற்றுவதற்ான போர்! எனத் தன் வாழ்க்கையையே தமிழ்க்காப்புக்கான போர்க்களமாக ஆக்கிக் கொண்டவர் தமிழ்க்காப்புத் தலைவர் பேராசிரியர் சி. இலக்குவனார். தமிழ்த் தேசியம் பற்றியும் கூட்டாட்சி பற்றியும் தமிழாட்சி பற்றியும் செம்மொழிச் சிறப்பு குறித்தும் இன்றைக்குப் பேசுவனவற்றை அன்றைக்கே தமிழ்க்காப்புத் தலைவர் பேராசிரியர் சி. இலக்குவனார் எண்ணிச் செயற்பட்டுள்ளதுதான் அவருக்குரிய பெருஞ் சிறப்பு.

இலக்குவனார் புகழ்பாடி, இனிய தமிழ் காப்போம்.

---

*இனி நமது செந்தமிழ் மொழியில் ஆரியம் ஆங்கிலம் முதலான பிறமொழிச் சொற்களைக் கலவாமல் நம்மால் கூடிய வரையில் முயன்று அதனைத் தூயதாக வழங்கல் வேண்டும்.*

**-மறைமலையடிகள்**

*உலக மொழிகள் ஏறத்தாழ மூவாயிரம் எனக் கணக்கிடப்பட்டுள்ளன. அவற்றுள் தொன்மை, முன்மை, எண்மை(எளிமை), ஒண்மை(ஒளிமை), இளமை, வலிமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்னும் பல்வகைச் சிறப்புகளை ஒருங்கே உடையது தமிழே.*

**-தேவநேயப் பாவாணர்**